செய்தி வெளியீடு எண் :16 நாள் :10.10.2017

***தேனி மாவட்டம்,***
***நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில்***
***தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கான கூட்டு குடிநீர் அபிவருத்தி திட்டப்பணிகளை***
***மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள்***
***பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்:-***

*********

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றித்திற்குட்பட்ட கோவில்பட்டி ஊராட்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரூ.68.85 கோடி மதீப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள கூட்டு குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை இன்று (10.10.2017) மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்விற்குப்பின் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், மறைந்த முன்னாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் காட்டிய வழியில் தமிழக அரசு பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மேலும், மறைந்த முன்னாள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டு பொதுமக்களின் குடிநீர் தேவையினை கருத்தில் கொண்டும், வைகை அணையின் நீரினை ஆதாரமாக கொண்டும் ரூ.68.85 கோடி மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிகளை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து தமிழக அரசு இத்திட்டப்பணியினை சிறப்பாக செயல்படுத்தி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது. இதன்மூலம் தேனி-அல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட 33 வார்டுகளில் வசிக்கின்ற 1 இலட்சம் முதல் 1.50 இலட்சம் வரையிலான பொதுமக்கள் பயனடைவார்கள் என மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவித்தார்.

இந்தஆய்வின்போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜக்கையன் அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் திரு.முத்துபழனியப்பன் அவர்கள், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.இரா.ஆனந்தி அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் திரு.ராஜாராம் அவர்கள், உதவி செயற்பொறியாளர் திரு.செல்வம் அவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**